REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: மாசி 21உ திங்கள் (4—3—57) ★ ★ வெளியூர்: மாசி 22உ செவ்வாய் (5—3—57) [இதழ் 228

இரண்டே நாட்களில்!

விடுதலைப் போரில் 175 பேர் பலி

அல்ஜீரியா, மார்ச் 3—

மத்திய, கிழக்கு அல்ஜீரியப் பகுதிகளில் உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள்மீது பிரெஞ்சுப் போலீசார் மேற்கொண்டுள்ள அடக்குமுறைக் கொடுமைகளுக்கு ஆளாகி, கடந்த 2 நாட்களில் மட்டும் 175 பேர் தங்கள் உயிரைப் பலிகொடுத்திருக்கின்றனர்.

கழக வெற்றிப் பட்டியல் துவக்கம்

காஞ்சியில் உற்சாக வெள்ளம்

‘உதயசூரியன்’ வாக்காளரின் தாரகமந்திரமாகிறது

நம்பிக்கை மிகுந்த வாக்குப் பதிவு

காஞ்சிபுரம், மார்ச் 4—

அண்ணா அவர்களின் காஞ்சித் தொகுதியில் வாக்குப் பதிவு மிக உற்சாகமாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்கிறது.

அதிகாலையிலேயே வாக்குப் பதிவுச் சாவடிகளில் ஆண்களும் பெண்களும் வரிசை வரிசையாக அணிவகுத்து நின்றனர்.

பெருமைக்குரியதோர் வரலாற்றின் சிருஷ்டிகர்த்தாக்களான காஞ்சித் தொகுதி வாக்காளர்கள், தங்களுக்கும் நாயகத்திற்கும் பெருமையைத் தேடிக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையை உறுதி செய்யும் வகையில் வாக்குப் பதிவு உள்ளது.

பகல் 12-மணிவரை, சுமார் 40 முதல் 50 சதவிகித வாக்காளர்கள் வாக்குகளைப் பதிவு செய்திருக்கின்றனர் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

காஞ்சி நகரம், இதுவரை வேறெப்போதுமில்லாத பரபரப்புடன் காணப்படுகிறது. இன்று காலை எழுந்ததும் காஞ்சி நகர், ஏற்கனவே பூண்டிருந்த விழாக்கோலத்திற்கு மெருகு பூசிக்கொண்டிருந்தது.

இந்தத் தொகுதியில் நடைபெறும் வாக்குப் பதிவு, தமிழகத்தின் தலைவிதியை நிர்ணயிக்கப்போகும் வாக்குப் பதிவு என்பதால், தமிழகத்தின் பல மாவட்டங்களிலிருந்தும் பார்வையாளர்கள் ஏராளமாக வந்துள்ளனர்.

ஆயிரக்கணக்கான வெளியூர் கழகத் தோழர்கள், காஞ்சித் தொகுதியில் நடைபெறும் வாக்குப் பதிவு காண வந்துள்ளனர். அவர்கள் எல்லாம் மிகுந்த உற்சாகத்தோடு காஞ்சி நகரிலும் தொகுதியிலும் பவனி வந்தவண்ணமுள்ளனர்.

தி. மு. கழக துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களும் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களும், மகளிர் மன்றத் தலைவி சத்தியவாணிமுத்து அவர்களும் மகளிர் மன்றச் செயலாளர்களுள் ஒருவரான திருமதி புவனேசுவரி-நடராசன், மகளிர் மன்ற உறுப்பினர்கள் பலரும் நகருக்கு வந்து, வாக்குப் பதிவினைக் கண்காணித்து வருகின்றனர்.

வாக்குப் பதிவில், ஆண்களைவிட பெண்களே அதிக உற்சாகம் காட்டிவருகின்றனர். பல சாவடிகளிலும் பெண்கள் கூட்டம்தான் ஏராளம்.

கழகத் தோழர்கள் அனைவரும் வெகு உற்சாகமாக வேலை செய்துவருகின்றனர்.

வெற்றி நமக்குத்தான் என்ற நம்பிக்கையை அவர்களின் ஒளி பொருந்திய மகிழ்ச்சி தவழும் முகங்கள் கூறுகின்றன.

★

ஏ. கோவிந்தசாமி முதல் முரசு கொட்டுகிறார்

முடிவை அதிகாரபூர்வமாகத் தெரிவிக்க அதிகாரி மறுப்பு

சென்னை, மார்ச் 4—

திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றிப் பட்டியல் தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்களது பெயருடன் துவங்குகிறது.

தென்னாற்காடு வளவனூர் தொகுதியில் போட்டியிட்ட தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் 31,732 வாக்குகள் பெற்றிருக்கிறார்; அவரை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் அபேட்சகரான கிருஷ்ண கவுண்டர் என்பார் 16,096 வாக்குகள் மட்டுமே பெற்றுப் படுதோல்வி கண்டிருக்கிறார்; மற்றொரு சுயேச்சை அபேட்சகர் அழகப்ப படையாச்சி என்பார் 3,734 வாக்குகளே பெற்றுப் படுதோல்வியுற்றிருக்கிறார்.

தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் காங்கிரஸ் அபேட்சகரைவிட 15,636 வாக்குகள் அதிகம் பெற்று மகத்தான வெற்றியுற்றிருக்கிறார்.

ஆனால், இந்த முடிவை அதிகாரபூர்வமாகத் தேர்தல் அதிகாரி அறிவிக்கவில்லை. ஏதோ சில வாக்குச் சீட்டுகளில், ‘போலிங் ஸ்டேஷன்’ எண் இல்லை என்றும், அவை செல்லத்தக்கதா இல்லையா என்பதை அறிந்துகொண்ட பின்னரே அதிகாரபூர்வமாக தோழர் ஏ. கோவிந்தசாமியின் வெற்றியை அறிவிக்க முடியும் என்றும் சாக்குக் கூறுகிறார் எனத் தெரிகிறது.

போலிங் ஸ்டேஷன் எண் முத்திரை இல்லாமலிருக்கும் வாக்குகள் விரல்விட்டு எண்ணக்கூடியவைதான் என்றும், அவை, முடிவை எந்த வகையாலும் பாதிப்பதற்கில்லை என்றும் தெரியவருகிறது.

கழக அபேட்சகர்களின் வெற்றியை தோழர் ஏ. கோவிந்தசாமி துவக்கிவைத்திருக்கிறார்.

★

தோல்வி மனப்பான்மையின் விளைவு!

காங்கிரசாரின் இழிசெயல்

வாக்குப் பதிவு நாளில் காஞ்சியில் ஊர்வலம் நடத்த முயற்சி

காஞ்சீபுரம், மார்ச் 4—

தோல்வி மனப்பான்மை தோன்றிவிட்டதால், காங்கிரசாரும் அவர்களது ஆதரவாளர்களும், இன்று இங்கு வாக்குப் பதிவு நடைபெறுகையில் தாரை-தப்பட்டைகளை ஒலித்துக்கொண்டு ஊர்வலம் நடத்த முயற்சித்திருக்கின்றனர்.

“டோல் கேட்’ வாக்குப் பதிவுச் சாவடி முன்பாக இப்படி ஊர்வலம் நடத்த முயற்சித்ததைக் கண்ட தோழர்கள், போலீசாரிடம் புகார் செய்தனர். உயர்தர போலீஸ் அதிகாரிகள்வந்து ஊர்வலத்தில் வந்த மாட்டுப் பெட்டிக்காரர்களை, கலைந்து செல்லுமாறு செய்திருக்கின்றனர்.

எப்படியாவது ஒரு அமைதியற்ற சூழ்நிலையை உருவாக்கி, ‘உதய சூரியன்’ பெட்டியில் ஓட்டு விழாமல் தடுத்துவிட வேண்டும் என்ற கெடுநினைப்புடன் அவர்கள் மேற்கொண்ட அந்த முயற்சியும் தோல்வியுற்றிருக்கிறது.

எத்தனைதான் ஆத்திரமூட்டப்பட்டாலும், கழகத் தோழர்கள் மிகப் பொறுமையுடன் வாக்குப் பதிவு வேலைகளைக் கவனித்து வருகின்றனர்.

தமிழ்நாட்டில்காங்கிரசின் தோல்விப்படலம் ஆரம்பம்

முதல் முடிவே காங்கிரசுக்கு அவலம்

இரு மந்திரிகள் மட்டும் குறுகிய பெரும்பான்மையில் வெற்றி பெற்றனர்

தமிழ் நாட்டில் காங்கிரசாரின் தோல்விப் படலம் துவங்கிவிட்டது.

அறிவிக்கப்பட்ட முதல் தேர்தல் முடிவு, காங்கிரசிற்குத் தோல்வியையே பரிசாகத் தந்தது.

தென்காசியில் காங்கிரஸ் அபேட்சகர் தோல்வி கண்டிருக்கிறார். அவரை எதிர்த்த ஒரு சுயேச்சை அபேட்சகர் கே. சட்டநாதக் கரையாளர் வெற்றி பெற்றுள்ளார்.

அடுத்து வளவனூர் தொகுதியில் காங்கிரசை தோழர் ஏ. கோவிந்தசாமி தோற்கடித்திருக்கிறார்.

மந்திரிகள் மாணிக்கவேலரும் சுப்பிரமணியமும் குறுகிய மெஜாரிட்டியில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மந்திரி மாணிக்கவேலர், துரிஞ்சாபுரம்தொகுதியில் அவரை எதிர்த்து நின்ற தி. மு. கழக அபேட்சகர் முருகையன் அவர்களைவிட 6,000 ஓட்டுகள் மட்டுமே அதிகம் பெற்றுள்ளார்!

அதேபோல, கோவில்பாளையம் தொகுதியில் மந்திரி சுப்பிரமணியம் அவரை எதிர்த்து நின்ற பி. சோ. அபேட்சகரைவிட சுமார் 9 ஆயிரம் ஓட்டுகளே அதிகம் பெற்று வெற்றியடைந்திருக்கிறார்.

ஏன் இந்தப் பாரபட்சம்?

தேர்தல் அதிகாரிகள் காங்கிரசாருக்கு உடந்தையா?

கழக அபேட்சகர்களின் வாக்குகளை எண்ணுவதிலும் அவர்கள் வெற்றி பெற்றால் அந்த முடிவுகளை அறிவிப்பதிலும் தேர்தல் அதிகாரிகள் வீண் காலதாமதம் செய்வதாகத் தெரியவருகிறது.

காங்கிரசாரின் ஓட்டுகளை எண்ணுவதிலும் வெற்றி பெறுவோரின் பெயர்களை அறிவிப்பதிலும் சுறுசுறுப்புக் காட்டும் அதிகாரிகள், கழக அபேட்சகர்களைப் பொறுத்து பாரபட்சம் காட்டுவது ஏன் என்று பல தொகுதி மக்கள் கவலையோடு கேட்கிறார்கள்.

அதிகாரிகளின் இந்தப் போக்கு, ‘நேர்மையான தேர்தல்’ என்ற வாக்குறுதியைப் பொய்ப்பிக்கும் என்பதை சம்பந்தப்பட்டவர்களுக்கு எச்சரிக்க விரும்புகிறோம்.

கழகத்தோழர் விடுதலை

திருச்சி, மார்ச் 3—

தூத்துக்குடி வழக்கில் சிறை சென்றவர்களில் ஒருவரான தோழர் காசி அவர்கள் வருகிற 7-ந் தேதியன்று திருச்சி மத்திய சிறையிலிருந்து விடுதலை ஆகிறார்.

ஒரே நாளில் ரூ. 54,700!

சென்னை, மார்ச், 1—

தி. மு. கழகத் தேர்தல் அறிக்கை வெளியிடுவதற்குக் கூட்டப்பட்ட சிறப்பு மாநாடு தினத்தன்று (பிப். 10) மட்டும் சென்னை நகர பஸ் போக்குவரத்தில் ரூ. 54,700 வசூலாயிற்றாம்!

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 4—3—57 திங்கள்

வஞ்சக யோசனை!

"வடநாடு என்று குறிக்கிற எல்லாவற்றையும் எதிர்க்கிற பிரிவினைச் சக்திகள், தென்னாட்டில் தீவிரமாகி வருகின்றன என்பதை நாம் உணர வேண்டும்"

என்பதாக, சென்னை மாநில முன்னாள் கவர்னரும் இப்போதைய பம்பாய் கவர்னருமான பிரகாசா அவர்கள், நாகபுரிக் கூட்டம் ஒன்றில் பேசியிருக்கிறார்.

பிரகாசா அவர்கள், தென்னாட்டில்—தமிழகத்தில் வடநாட்டு ஆதிக்கத்திற்கு எதிராக தோன்றியுள்ள விடுதலை இயக்கத்தை—திராவிட முன்னேற்றக் கழகத்தைத்தான் 'பிரிவினை சக்தி'கள் என்று குறிப்பிட்டிருக்கிறார் என்று கருதுகிறோம்.

தமிழ் நாட்டிலேயே நான்கு ஆண்டுகளுக்கு மேலாக கவர்னராக இருக்கும் வாய்ப்பினைப் பெற்றிருந்த பிரகாசா அவர்கள், தி. மு. கழகத்தைப் பற்றி பிரகாசமான விளக்கம் பெற்றிருக்கிறார் என்றே கருதுகிறோம்.

தென்னாட்டில் தோன்றியிருக்கிற விடுதலை இயக்கத்தையும் அதன் தொடர்ச்சியான வளர்ச்சியையும் போராற்றலையும் உணரும் வாய்ப்பைப் பெற்றிருந்த பிரகாசா அவர்கள், இந்த மாநிலத்திலிருந்து மாற்றலாகிச் செல்லும்போது நாம், 'அவர் தனது வடநாட்டுச் சகாக்களுக்கும் மக்களுக்கும் தென்னாட்டு மக்களின் விடுதலை வேட்கையை எடுத்தியம்ப வேண்டும்' என்று எடுத்துரைத்திருந்தோம்.

ஆனால் பிரகாசா அவர்கள், துவக்கத்தில் கண்டபடி மட்டுமே இப்போது வடநாட்டு நகரம் ஒன்றில் குறிப்பிட்டு விட்டு, வடநாட்டு இந்தி வெறியர்களுக்கு 'எச்சரிக்கை' ஒன்றையும் விடுத்திருக்கிறார்.

அவரது அந்த எச்சரிக்கையை வஞ்சக யோசனை! என்று கூறுவதும் பொருந்தும்: ஏனெனில், 'இந்தி பற்றிப் பேசும்போது வெகு ஜாக்கிரதையாக' இருக்கவேண்டுமாம், வடவர்!

இந்தியைத் தங்கள் மீது திணிப்பதைத் தென்னாட்டு மக்கள் சகித்துக்கொள்ளமாட்டார்கள் என்ற உண்மை, பிரகாசாவுக்கு நன்கு தெரிந்தே இருக்கவேண்டும். இங்குதான் 'பிரிவினைச் சக்திகள் தீவிரமாகி வருகின்றன' என்று அவரே கூறுகிறார்: ஆதலால், தீவிரமாகிவரும் பிரிவினை சக்திகள், இந்தி நுழைப்பை அனுமதிக்கப் போவதில்லை என்பதும், பிரகாசாவிற்குத் தெரியாமல் இருக்க நியாயமில்லை.

பின், எப்படியாவது இந்தியைத் திணிப்பது என்று முடிவு செய்துவிட்ட வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகளுக்கும் இந்தி வெறியர்களுக்கும், தென்னாட்டு மக்களின் திட்டவட்டமான கருத்தை—இந்தித் திணிப்பிற்கு எதிரான முடிவை, பிரகாசா, தமது சகாக்களுக்கு ஏன் தெரிவிக்கக் கூடாது! தெரிவிக்கமாட்டார் தான் பிரகாசா; ஏனெனில் அவரும் வடநாட்டவர்தானே!

இந்தியைப் பற்றிப் பேசும் போது, மூர்க்கத்தனமான பாசிச வெறியோடு பேசுகின்றனர், எல்லா 'ஏக இந்தியா'க்களும்!

'இந்தி, தென்னாட்டு மக்கள் மீது திணிக்கப்படும் வேகம் போதுமானதல்ல; இந்தித் திணிப்பு இன்னும் துரிதமாக வேண்டும்—தீவிரமாக வேண்டும்' என்று பேசாத 'அகில இந்தியா'க் கட்சிகளே இல்லை எனலாம். அந்த 'அகில இந்தியா'க்களுக்கு, தமிழ் நாட்டில் உள்ள சில 'பிற்போக்கு முற்போக்குக் கங்காணிகள்' தாளம் தட்டத் தவறவும் இல்லை.

இந்த வெறி கொண்ட வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகளுக்குத்தான் பிரகாசா, வஞ்சகமான யோசனை ஒன்றைக் கூறுகிறார். இந்தி பற்றிப் பேசும் போது, "இந்தியை தேசிய மொழி என்று கூறாதீர்; பதினான்கு மொழிகளல்லவா இங்கு தேசிய மொழிகள்? 'இந்தி வெறும் அரசாங்க மொழி,' என்று மட்டுமே கூறுங்கள். எப்போது இந்தி பற்றிப் பேசினாலும் தடித்த வார்த்தைகளை—பாசிச வெறி நெடி தட்டுகிற வார்த்தைகளை உபயோகிக்காதீர்கள்" என்று உபதேசிக்கிறார், பிரகாசா!

எத்தனைதான் பாதுகாப்பான வார்த்தைக் கோர்வைகளுக்கிடையே இந்த ஏகாதிபத்திய நோக்கம்—இந்தித் திணிப்பு புதைத்து வைக்கப் பட்டிருந்தாலும் சரி, எந்த ரூபத்தில்—எந்தப் பக்கத்தில் இந்தித் திணிப்பு மேற்கொள்ளப்பட்டாலும் சரி, வடவரின் இந்த வெறிக்கு தமிழகத்தில் கிடைத்துள்ள 'பிற்போக்கு முற்போக்குக் கங்காணிகள்' நியாயம் கற்பிக்க மூலாம் பூசி கவர்ச்சிகரமாக்கப்பட்ட கோஷங்களை எத்தனைதான் எழுப்பினாலும் சரி, வேகமாக அரசியல் விழிப்புணர்வு பெற்று வரும் தென்னாட்டு மக்கள் இந்தச் சூதினைத் தெளிவாகப் புரிந்துகொண்டு, சதியினை முறியடிக்கத் தவறமாட்டார்கள் என்பதை உறுதியாகச் சொல்லி வைக்கிறோம்.

வஞ்சகத்தால் தமிழரை வீழ்த்திய காலம் விடைபெற்றுக்கொண்டுவிட்டது என்பதை வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகளின் தமிழ் நாட்டு தாசர்கள் உணரட்டும்!

வாக்குப் பெட்டிகள் மாற்றப்பட்டதாம்!

புதிதாக வாக்குப் பதிவு நடைபெற உத்தரவு

குவாலியர், மார்ச். 1—

சிவபுரி மாவட்டத்தில், பிச்சோரி சட்டசபைத் தொகுதியில் ஒரு வாக்குப் பதிவு நிலையத்தில் பெட்டிகள் மாற்றிவைக்கப்பட்டதின் காரணமாக, அந்த புதிதாக வாக்குப் பதிவு நடைபெற உத்திரவிடப்பட்டிருக்கிறது.

'தேர்தல் காலத்தில் ஆட்சிப் பொறுப்பு மந்திரிகளிடம் கூடாது'

'இதற்காக அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும்'

ஆச்சாரியார் கருத்து

"பெரிய ஆலை முதலாளிகள், டிரான்ஸ்போர்ட் வர்த்தக முதலாளிகளிடம் ஆளும் கட்சியினர் பணம் வசூல் செய்துள்ளனர்—பதவியில் இருப்பவர்கள் இப்படி செய்துள்ளனர்.

"தேர்தல் காலத்தில் மந்திரிகள் பதவிகளை விட்டு விலகி, ஆட்சி பொறுப்பை கவர்னர்கள், ராஷ்டிரபதி, நிரந்தர அரசாங்க அதிகாரிகளிடம் விட்டு விட்டுத் தேர்தலில் போட்டியிடும் வகையில் அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டுமென்று யோசனை கூறுகிறேன்.

"அப்படிச் செய்தால் எல்லாக் கட்சியினருக்கும் சமசந்தர்ப்ப நிலை ஏற்படும். 'நிரந்தர அதிகாரிகளை நம்பலாமா' என்று கேட்கலாம். நெருக்கடி ஏற்பட்டு கவர்னரே ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்போது நிரந்தர அதிகாரிகள்தானே ஆட்சி செய்கிறார்கள்? மேலும் தேர்தலில் யார் வெற்றி பெற்று வருவார்கள் என்று தெரியாததால், தவறாக நடக்கத் தயங்குவார்கள்.

"மேலும் தேர்தல் காலத்தில், கொள்கை சம்பந்தப்பட்ட விஷயங்களில் இதர நாடுகளில் உத்தரவுகள் பிறப்பிக்கப்படுவதில்லை; புதிய சலுகைகள், சம்பள உயர்வு அளிக்கப்படுவதில்லை. மந்திரிகள், கொள்கை பற்றிய அதிகாரபூர்வமான காரியங்களைக் கவனிப்பதில்லை. நம் மந்திரிகள், அதிகாரபூர்வமான விஷயங்களையா கவனிக்கிறார்கள்? நீண்டகாலமாக முடிவு செய்யப்படாமலிருக்கும் விஷயங்களில் திடீரென்று முடிவு செய்யப்பட்டு உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன. இது, தேர்தலில் போட்டியிடும் எல்லாக் கட்சிகளுக்கும் சமசந்தர்ப்பமளித்ததாகாது.

"தேர்தல் காலத்தில் மந்திரிகள் பதவிகளில் இல்லை என்றால் ஓட்டுகள் நிலைமாறும். ஆகவேதான், நிரந்தரமான அரசியல் சட்ட ஏற்பாடு தேவையென்று கூறுகிறேன்."

—2—3—57-ல் சென்னைப் பதிப்பு 'தினமணி' இதழில் வெளியாகியுள்ள இராசகோபாலாச்சாரியார் சொற்பொழிவின் ஒரு பகுதி.

காங்கிரஸ் மந்திரிகள் தோல்விப் பட்டியல் நீளுகிறது

இலட்சமணபுரி, மார்ச் 1—

உ. பி. மாநில மந்திரி ஒருவர், பி. சோ. கட்சி அபேட்சகரிடம் படுதோல்வியடைந்திருக்கிறார்.

திட்டம், சுகாதாரம், தொழில் முதலிய இலாகாக்களின் பொறுப்பிலிருந்த சந்திரபானு குப்தா என்ற அந்த மந்திரி, உ. பி. காங்கிரசில் பெரியபுள்ளியாம்!

இவரது தோல்வி காங்கிரசிற்குப் பெரிய அதிர்ச்சியைத் தந்துள்ளதாம்!

இவரைத் தோற்கடித்தவர் பி. சோ. கட்சியின் 'அகில இந்திய' செயலாளராம்! இவர், 11,000 ஓட்டுகளுக்கும் அதிகமாகப் பெற்று, வெற்றிபெற்றிருக்கிறார்!

★

ம.பி.-யில் காங்கிரஸ் 'புலி'க்கு 'சீட்டு'!

மத்தியப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த ஒரு காங்கிரஸ் 'புலி' மண்ணைக் கவ்வியிருக்கிறது!

இலட்சுமி நாராயணதாஸ் என்பவர் காங்கிரஸ் கட்சியின் 'கொரடா'! இவர்தான் தோற்றவர்!

★

அசாமில் மேலும் ஒரு மந்திரிக்குத் தோல்வி!

அசாம் மாநிலத்தில் ஒரு மந்திரியும் தோற்கடிக்கப்பட்டிருக்கிறார். இவரைத் தோற்கடித்தவர் ஒரு பி. சோ. கட்சி அபேட்சகர் எனத் தெரிகிறது.

அபேட்சகர்கள் கவனத்திற்கு:

சென்னை, மார்ச் 2—

பதிவான வாக்குகளை எண்ணி முடிவது ஒரே நாளில் இயலாது போகும்போது அபேட்சகர்கள் விரும்பினால், அரசாங்கத்தின் பூட்டுகள், சீல்களுடன் தங்கள் சொந்தப் பூட்டுகளையும் கொண்டு பூட்டுவதற்கும் அனுமதியளிக்கப்படுவர் என்று பிரதம தேர்தல் அதிகாரி அறிவித்திருக்கிறார்.

பர்மாவின் பிரதமராக மீண்டும் ஊ - நூ

இரங்கூன், பிப். 28—

பர்மா பிரதிநிதிகள் சபையில் இன்று, முன்னாள் பிரதமர் ஊ - நூ மீண்டும் பிரதமராக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இப்போதைய பிரதமர் துணைப் பிரதமராக இருப்பார்.

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் சுற்றுப்பயண மேல்விவரம்

மன்னார்குடி

குடந்தை பொதுக்கூட்டம் இரவு 1-30 மணிக்கு முடிவுற்றதும் மன்னார்குடி நாடக நிகழ்ச்சியில் கலந்து கொள்ளப் புறப்பட்டார். 20-2-57 அதிகாலை 4-30 மணிக்கு மன்னார்குடி வந்தடைந்தனர். அங்கு நாடகக் கொட்டகையில் தோழர் இராமச்சந்திரன் மற்றும் தோழர்கள் வருகைக்காகப் பல்லாயிரக்கணக்கில் மக்கள் திரண்டிருந்தனர். பின்னர் நாடகத்திற்குத் தலைமை வகித்து தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் சிறப்பானதோர் உரை நிகழ்த்தினார். இந்நிகழ்ச்சிகள் முடிய பல மணி நேரம் ஆகி விட்டபடியால் அன்று அதிராம்பட்டினம், பட்டுக்கோட்டை, தஞ்சை, திருவையாறு, கந்தர்வகோட்டை நிகழ்ச்சிகள் ரத்து செய்யப்பட்டன. மன்னார்குடி நாடக நிகழ்ச்சி முடிவுற்றதும் நேரே திருச்சிக்குப் பயணமானார்கள்.

ஊர்வலம்

20-2-57 பகல் 12-30 மணிக்கு திருச்சி பொன்மலைத் தொழிலாளர்கள் காலனி, திருவரம்பூர் பகுதி, திருச்சிபுரம் ஆகிய இடங்கள் வழியே தோழர் எம். ஜி. ஆர். அவர்களும் மற்றையோரும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்கள். மாலை 2-30 மணிக்கு ஊர்வலம் முடிவுற்றது.

பூவாளூர், லால்குடி

பிற்பகல் 3-30 மணிக்கு பூவாளூரிலும், மாலை 4 மணிக்கு லால்குடியிலும் நடைபெற்றக் கூட்டங்களில் கலந்து கொண்டனர். தேர்தலில் தி. மு. கழக அபேட்சகர்களை ஆதரித்து வெற்றி தேடித் தருமாறு தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் கேட்டுக்கொண்டார்.

வாளவாடி, தாழக்குடி:

பின்னர் வளவாடி, தாழக்குடி ஆகிய இடங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டனர். அங்கு தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் கழகக் கொடிகளை ஏற்றிவைத்தார்.

கரூர்:

மாலை 6 மணிக்கு தோழர் எம். குழந்தைவேல் தலைமையில் சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் அ. பொன்னம்பலனார், என்.எஸ். நாராயணன் ஆகியோர் பேசின பின் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் தேர்தலில் மக்கள் கடமை குறித்து அரியதோர் உரையாற்றினார். கூட்டத்தில் வசூலான தொகை தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கு அளிக்கப்பட்டது.

திண்டுக்கல்:

கரூர் கூட்டத்தை முடித்துக் கொண்டு தோழர் இராமச்சந்திரன் மற்றத் தோழர்களுடன் திண்டுக்கல் நாடகத் தலைமை ஏற்கச் சென்றார்.

இதனிடையில் அவருக்குத் தொண்டையில் புண் ஏற்பட்டு பேசமுடியாத நிலை ஏற்பட்டதால் சேலம், வேலூர், கொடுமுடி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள முடியாதவாறு ரத்து செய்ய வேண்டியதாயிற்று. இரவு 11 மணிக்கு திண்டுக்கல்லில் எம். ஜி. ஆர். நாடக மன்றத்தவரால் 'இன்பக் கனவு' நாடகம் நடைபெற்றது. நாடக இறுதியில் தோழர் எம். ஜி. ஆர். அவர்கள் நாடகம் மூலம் தி. மு. கழகத் தேர்தல் நிதி உதவிய அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டு, கழக அபேட்சகர்களை ஆதரிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

சித்தையன்கோட்டை:

21—2—57 காலை 10½ மணிக்கு தோழர் சுலைமான் தலைமையில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் கலந்துகொண்டு காங்கிரசின் ஆட்சியில் மக்கள் அடைந்த துன்பங்களையும் கஷ்டங்களையும் மனதிலிறுத்திக்கொண்டு, அவைகளினின்றும் மீண்டும் தங்களை விலக்க தி. மு. கழகத் தோழர்களை ஆதரிக்குமாறு தோழர் எம். ஜி. ஆர். அவர்கள் கேட்டுக் கொண்டு சீரியதோர் உரை நிகழ்த்தினார். தோழர்கள் கே. ஏ. மதியழகன், எஸ். முத்து, ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

பட்டிவீரன்பட்டி:

11½ மணிக்கு தோழர் எஸ். முத்து தலைமையில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் தோழர்கள் கே. ஏ. மதியழகன், அ. பொன்னம்பலனார், தா. ஆவுடையப்பன், கே. நடராசன், கன்னியப்பன் ஆகியோர் பேசினபின் இறுதியில் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள், தேர்தல் குறித்தும், தி. மு. கழக தோழர்களின் கடமை குறித்தும் சொற்பொழிவாற்றினார்.

இக்கூட்ட இறுதியில் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் சில தோழர்கள் கேட்டுக்கொண்டபடி அவர்களது குழந்தைகளுக்கு உதயசூரியன், வீரமணி, கண்ணகி, நெடுஞ்செழியன், கலைச்செல்வி என்ற பெயர்களைச் சூட்டினார். இதன் நினைவாக ரூ. 11-ம் கையெழுத்திட்டதற்காக மற்றொரு தோழரால் ரூ. 1-ம் ஆகமொத்தம் ரூ. 12 தேர்தல் நிதியாகத் தரப்பட்டது,

பின்னர் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் மற்ற தோழர்

(3-ம் பக்கம் பார்க்க)

மார்ச் 6—பொதுத் தேர்தலில் போட்டியிடும்

தி. மு. கழக ஆதரவாளர்கள்

சேலம்	... கணேச சங்கர்	... எஸ். வி. இராமசாமி (காங்); பேபி கந்தசாமி(கம்);மற்றுமிரு சுயேச்சைகள்.
கடலூர்	... கச்சிராயர்	... எஸ். இராதாகிருஷ்ணன் (காங்); முத்துக்குமாரசாமி நாயுடு (கா. சீ. க.)
திண்டுக்கல்		
1. பழனி	... வெங்கிடுசாமி [பூ]	... லட்சுமிபதிராஜ்(காங்)
நிலக்கோட்டை ... (த்னி)	எஸ். கன்னியப்பன் [நிற்கும் சிங்கம்]	... ஏ. எஸ். பொன்னம்மாள் (காங்) வடிவேலு (கா. சீ. க.); வெள்ளைக்கண்ணு (பி. சோ.)
ஒட்டன்சத்திரம்...	அங்கமுத்து [பூ]	... கருத்தப்ப கவுண்டர் (காங்)

எம். ஜி. ஆர். சுற்றுப்பயணம்

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

களுடன் புறப்பட்டார். வழியில் அய்யம்பாளையம், சித்தூர், சித்திரேவு, ஆத்தூர், பாரப்பட்டி, வீள்ளம்பட்டி, தர்மத்துப்பட்டி, கன்னிவாடி, பள்ளப்பட்டி, பண்ணைப்பட்டி, ஸ்ரீராமபுரம், மூலைச் சத்திரம், ஆகிய ஆத்தூர் தொகுதி ஊர்களில் பிரமாண்டமான வரவேற்புகள் தரப்பட்டன. எல்லா ஊர்களிலும் தோழர்கள் அனைவரும் தங்கி சிறிது நேரம் கழகக் கொள்கைகளை விளக்கி கழக அபேட்சகர்களை ஆதரிக்குமாறு கேட்டுக்கொண்டனர்.

பழநி:

மாலை 5½ மணிக்கு தோழர் பி. எஸ். ஷேக் அவர்களது தலைமையில் நடைபெற்ற தேர்தல் கூட்டத்தில் தோழர்கள் எஸ். முத்து, அ, பொன்னம்பலனார், வெங்கிடுசாமி ஆகியோர் பேசின பின் தோழர் எம். ஜி. ஆர். அவர்கள் தி. மு. கழகத் தோழர்களை பொதுமக்கள் ஆதரிக்கவேண்டிய அவசியம் பற்றியும்காங்கிரஸ் ஆட்சியாளர்களின்போக்கு குறித்தும் மக்கள் குரலை மதிக்காது அடக்குமுறைகளை அள்ளி வீசிய சர்க்காரின் இரத்த வெறியை சுட்டிக் காட்டியும் தென்னாடு வடநாட்டால் எப்படி அவமதிக்கப்படுகிறது—சுரண்டப்படுகிறது என்பதை விளக்கியும் சொற்பொழிவாற்றினர்.

கணியூர்:

இரவு 7½ மணிக்கு கணியூரில் மாரியம்மன் கோயில் திடலில் நடைபெற்ற தேர்தல் கூட்டத்தில் தோழர்கள் எம். ஜி. ஆர். கே. ஏ. மதியழகன், அ. பொன்னம்பலனார் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கணியூர் பொதுக் கூட்டம் முடிந்த பின் மடத்துக்குளம், சோழமாதேவி, வி. சல்லிப் பட்டி, உடுமலைப்பேட்டை ஆகிய ஊர்களில் பல்லாயிரக்கணக்கில் மக்களடங்கிய கூட்டங்களில் தோழர்கள் எம். ஜி. இராமச்சந்திரன், கே. ஏ. மதியழகன் ஆகியோர் கலந்துகொண்டு பொதுமக்கள் கடமை குறித்து விரிவுரையாற்றினர்.

பின்னர் தோழர் எம். ஜி. ஆர். அவர்களும் மற்றையோரும் 22—2—57 காலை 4½ மணிக்கு மதுரை வந்தனர்.

கோவில்பட்டி, புளியங்குடி:

2—2—57 மாலை 5½ மணிக்கு, கோயில்பட்டி, புளியங்குடி ஆகிய ஊர்களில் நடைபெற்ற பொதுக் கூட்டங்களில் தோழர்கள் எம். ஜி. ஆர்; அ. பொன்னம்பலனார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நாகர்கோவில்:

22—2—57 இரவு 11 மணிக்கு நாகர்கோவிலில் திறந்தவெளி அரங்கில் எம். ஜி. ஆர். நாடக மன்றத்தினரால் 'இன்பக் கனவு' நாடகமும், 23—2—57 இரவு 10½ மணிக்கு 'அட்வகேட் அமரன்' நாடகமும் சிறப்பாக நடைபெற்றன.

குளச்சல்:

24-2-57 இரவு 10½ மணிக்கு, குளச்சலில் 'இன்பக் கனவு' நாடகம் சிறப்புற நடைபெற்றது. நாடக இறுதியில் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன், தி. மு. கழகத் தேர்தல் நிதி அளித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். பின்னர் தோழர் வி. எம். ஜான் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

கன்னியாகுமரி:

24—2—57 மாலை 6 மணிக்கு, கன்னியாகுமரியில் நடைபெற்ற தி. மு. கழகத் தேர்தல் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் எம். ஜி. ஆர். அவர்களும் மற்றத் தோழர்களும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

கன்னியாகுமரி சென்று திரும்புகையில் கோட்டாறு தி. மு. கழகத் தோழர்களும் நாகர்கோயில் உடற்பயிற்சிக் கழகத் தோழர்களும் மலர் மாலைகள் சூட்டினர். வழிநெடுக பொதுமக்கள் திரண்டிருந்து வாழ்த்தொலி முழங்கினர்.

திருநெல்வேலி:

நாகர்கோவிலிலிருந்து திரும்பி திருநெல்வேலி வரும்போது, 25—2—57 காலை 7-30 மணிக்கு, மேலப்பாளையம் அருகில் தோழர் கந்தையா அவர்கள் சார்பில் மலர் மாலைகள் சூட்டி வரவேற்கப்பட்டார்.

கடையநல்லூர்:

25—2—57 காலை 9-30 மணியளவில் கடையநல்லூரில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தை முடித்துக்கொண்டு, காலை 10-30 மணிக்கு, சங்கரன்கோயில் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் எம். ஜி. ஆர்., அ. பொன்னம்பலனார் கலந்துகொண்டு 'தேர்தலும் மக்கள் கடமையும்' குறித்துப் பேசினர். தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் தலைமை வகித்தார்.

கோயில்பட்டி:

பகல் 12 மணிக்கு, தோழர் டபிள்யூ. டி. துரைசாமி தலைமையில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் தோழர் அ. பொன்னம்பலனார் சிறிது நேரம் பேசியபின், தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் கழகத் தோழர்களை ஆதரிக்குமாறு பொதுமக்களைக் கேட்டுக்கொண்டு உரையாற்றினர்.

ஸ்ரீவில்லிப்புத்தூர்:

பிற்பகல் 1 மணிக்கு, தோழர் மா. குருசாமி தலைமையில் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. கடும் வெயிலைக்கூடச் சிறிதும் பொருட்படுத்தாமல் புரட்சி நடிகர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களுடைய வருகைக்காகப் பல்லாயிரக்கணக்கான மக்கள் காத்திருந்தனர். பின்னர் எம். ஜி. ஆர். அவர்களும் தோழர் அ. பொன்னம்பலனார் அவர்களும் தேர்தலில் மக்கள், கழகத் தோழர்கள் கடமை குறித்து உரையாற்றினர்.

திருப்பத்தூர்:

இரவு 11 மணிக்கு, திருப்பத்தூரிலும் இரவு 12-30 மணிக்கு கண்டலராமன்பட்டியிலும், 1 மணிக்கு ஆ. தெற்கலூரிலும் நடைபெற்றக் கூட்டங்களில் தோழர்கள் எம். ஜி. இராமச்சந்திரன், கண்ணதாசன், அ. பொன்னம்பலனார் ஆகியோர் பேசினர்.

சிங்கம்புணரி:

சிங்கம்புணரியில் நடைபெற்றக் கூட்டத்தில் தோழர்கள் கலந்துகொண்டனர். அங்கு தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் கழகக் கொடியை ஏற்றி வைத்தார்.

மதுரை:

26—2—57 காலை 4 மணிக்கு, தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தோழர் அ. பொன்னம்பலனார் அவர்களுடன் மதுரை வந்தடைந்தார்.

[தொடர்ந்து வெளிவரும்]

மற்றுமோர் சிறப்பான தேர்தல் நாள்

பொதுச்செயலாளர் தொகுதியில் வாக்குப் பதிவு

மார்ச் 6-ந் தேதியன்று சி. பி. சிற்றரசு, இளம்வழுதி, என். எஸ். இளங்கோ தொகுதிகளிலும் தேர்தல்

தமிழகத்தில் துவங்கியுள்ள பொதுத் தேர்தல்களின் மூன்றும் கட்டம் மார்ச் 6-ம் தேதியன்று துவங்குகின்றது. அன்று, பல்வேறு தொகுதிகளிலும் போட்டியிடும் நமது கழக அபேட்சகர்களின் தேர்தல் சின்னம், நமது தோழர்களை எதிர்த்துப் போட்டியிடுவோர் பற்றிய விவரங்கள் கீழே தரப்படுகின்றன. தடித்த எழுத்துக்களில் உள்ளவை பாராளுமன்றத் தொகுதிகள்.

தொகுதிகள்	கழக அபேட்சகர்	சின்னம்	எதிர்த்துப் போட்டியிடுவோர்
சேலம்	....	......	....
1. சேலம் I	இரா. நெடுஞ்செழியன்	சேவல்	மாரியப்பன் (காங்); சாமுவேல் (கம்)
திருவள்ளூர்	....	......	....
1. அரக்கோணம்	ஏ. எல். சி. கிருஷ்ணசாமி	உதயசூரியன்	சடையப்ப முதலியார் (காங்); மற்றொரு சுயேச்சை.
திருப்பத்தூர்	சி. பி. சிற்றரசு		ஏ. துரைசாமி கவுண்டர் (காங்); மற்றும் 4 சுயேச்சைகள்.
1. வாணியம்பாடி	எம். பி. வடிவேலு	உதயசூரியன்	ஏ. ஏ. ரஷீத் (காங்); மற்றுமிரு சுயேச்சைகள்.
2. திருப்பத்தூர்	எம். நடேசன்	உதயசூரியன்	ஆர். சி. சாமண்ணக் கவுண்டர் (காங்); மற்றுமிரு சுயேச்சைகள்.
3. அரூர் (பொது)	டி. பொன்னுசாமி	வில்லும் அம்பும்	பி. எம். முனுசாமி கவுண்டர் (காங்); மற்றும் 4 சுயேச்சைகள்.
,, (தனி)	சி. தீர்த்தகிரி	சேவல்	எம். கே. மாரியப்பன் (காங்); பூசாமி (கம்)
கடலூர்	....	......	....
1. விழுப்புரம்	சண்முகம்	உதயசூரியன்	வி. பி. சாரங்கபாணி (காங்)
2. உளுந்தூர் பேட்டை	பே. பொ. இராமன்	உதயசூரியன்	கந்தசாமி (காங்); மற்றுமிரு சுயேச்சைகள்
3. கடலூர்	இளம்வழுதி	உதயசூரியன்	சீனிவாச படையாச்சி (காங்); சம்பந்தம் (கா. சீ. க.).
4. நெல்லிக்குப்பம் (பொது)	வி. கிருஷ்ணமூர்த்தி	உதயசூரியன்	சிவசிதம்பரம் இராமசாமி (காங்); முத்துக்குமாரசாமி நாயுடு (கா. சீ. க.)
,, (தனி)	இராசாங்கம்	நட்சத்திரம்	தங்கவேலு (காங்); மற்றுமொரு சுயேச்சை.
தஞ்சாவூர்	....	......	....
1. தஞ்சை	பெத்தண்ணன்	உதயசூரியன்	பரிசுத்த நாடார் (காங்); ஆர். கோபாலகிருஷ்ணன் (கா. சீ. க.)
2. கந்தர்வகோட்டை	தங்கமுத்து	உதயசூரியன்	கிருஷ்ணசாமிகோபாலர் (காங்); மற்றும் 4 சுயேச்சைகள்.
3. அதிராம்பட்டினம்	என். எஸ். இளங்கோ	உதயசூரியன்	சுந்தரேசதேவர் (காங்); மாரிமுத்து (பி. சோ.)
4. பட்டுக்கோட்டை	அருணசலம்	உதயசூரியன்	சீனிவாச அய்யர் (காங்); மாசிலாமணி (கம்)
5. அறந்தாங்கி	ஷேக் அப்துல்காதர்	உதயசூரியன்	முத்துவேலம்பலம் (காங்); மற்றும் 3 சுயேச்சைகள்.
திருச்சிராப்பள்ளி	எம். எஸ். மணி		அப்துல் சலாம் (காங்); கே. அனந்தன்நம்பியார் (கம்); மற்றும் 3 சுயேச்சைகள்.
1. திருச்சி II	காமாட்சி	உதயசூரியன்	சுப்புரத்தினம் (காங்).
2. முசிறி (பொது)	முத்துக்கருப்பன்	உதயசூரியன்	வி. ஏ. முத்தையா (காங்); ஜி. கோவிந்தராசன் (கம்); மற்றும் சிலர்.
,, (தனி)	துரைராஜ்	சேவல்	டி. வி. சன்னாசி (காங்); பழனியாண்டி (கம்); மற்றும் சிலர்.
திண்டுக்கல்	....	......	....
1. நிலக்கோட்டை (பொது)	ஆவுடையப்பன்	உதயசூரியன்	சந்திரசேகரன் (காங்); பி. பிச்சை (பி. சோ.); மற்றும் சிலர்.
2. மேலூர் (பொது)	ஏ. வேல்சாமி	உதயசூரியன்	பெரிய கருப்பன் அம்பலம் (காங்); மற்றும் சிலர்.
			பி. கக்கன் (காங்); மற்றும் சிலர்.
,, (தனி)	பி. சமதர்மம்	சேவல்	ஜமால் மொகிதீன் (காங்); ஏ. பாலசுப்பிரமணியம் (கம்); மற்றும் சிலர்.
3. திண்டுக்கல்	ஜனார்த்தனம	உதயசூரியன்	
4. ஆத்தூர்	வி. எஸ். எஸ். மணி	உதயசூரியன்	ஏ. ஆறுமுகசாமி செட்டியார் (காங்); மற்றும் சிலர்
நீலகிரி	....	......	....
1. சூலூர்	சண்முகசுந்தரம்	உதயசூரியன்	குழந்தையம்மாள் (காங்); ராமணி (கம்)
2. கூனூர்	ஒளியழகன்	உதயசூரியன்	மாதாகவுடர்(காங்); மற்றும்சிலர்
3. உதகமண்டலம்	சஞ்சிராசிசு	உதயசூரியன்	லிங்க கௌடர் (காங்); மற்றும் சிலர்.

வருங்கால தமிழக வாழ்வும் தாழ்வும் பெண்களிடமே இருக்கிறது

தென்னாட்டின் அடிமை நிலை நீங்க தி.மு. கழகத்திற்கு வாக்களியுங்கள்

தாய்மார்களுக்கு டாக்டர் தருமாம்பாள் அம்மையார் வேண்டுகோள்

" தமிழ்க் குலப் பெண்மணிகளாகிய நாம் மிகவும் நெருக்கமான கட்டத்தில் இருக்கிறோம். நாடு சுயாட்சி பெற்று இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் அமுலாகியும் தமிழ்க் குலப் பெண்கள் இனம் எந்த வகையில் எவ்வளவு முன்னேறி உள்ளது? ஏன் முன்னேற்றம் அடையவில்லை? காரணம் என்ன?—என்று என்றைக்காவது சிந்தித்தோமா? இல்லை. அப்படிச் சிந்திப்பதற்கு ஒரு அரிய சந்தர்ப்பம்தான் இந்தத் தேர்தல்.

" ஆகவே, நடைபெற இருக்கும் பொதுத் தேர்தலின் வெற்றியும் தோல்வியும் பெண்களிடத்தில்தான் உள்ளது. ஓட்டுச் சாவடிக்குத் தவறாது சென்று தங்கள் கடமைகளை ஆற்றினால் அடுத்த ஐந்து ஆண்டுகளின் மக்களின் வாழ்வும் தாழ்வும் தேர்தலில் வெற்றி பெறும் அபேட்சகர் வசம் உள்ளது என்பதை பெண்கள் அறியவேண்டும். நமது எதிர்காலப் பலன்களுக்கு — நமது சந்ததிகளின் நன்மைக்கு இன்று நமது வாக்குகளை, தக்க இலட்சியமும் கொள்கையும் உறுதிகுலையா பண்பும் உடைய தி. மு. கழக அபேட்சகர்களுக்குத் தருவதின் மூலம்தான் உள்ளது. அவர்களது தொண்டுகளால்—தியாகத்தால் — கண்ணியத்தால்தான் தென்னகத்தை—அதன் மொழி வளத்தை — கலைவளத்தை — பண்பை - நாகரீகத்தை - தாழ்ந்த நிலையில் உள்ள வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் காக்கவும் முடியும். வடவர் கையிலே தென்னகம் அடிமைப்பட்டுள்ள நிலையை முக்கியமாக மாற்ற முடியும்.

" எனவே நடைபெற இருக்கும் பொதுத் தேர்தலுக்குப் பெண்கள் எல்லோரும் ஒரு வோட்டும் வீணாகாதபடி நாட்டின் நலன் கருதிப் பயன்படுத்த வேண்டும் என்று நோய்வாய்ப்பட்டு படுக்கையிலிருந்தவாறே தமிழ் நாட்டில் உள்ள எல்லாத் தாய்மார்களையும், அவர்களது இளஞ்சிறார்களின் எதிர்கால நன்மைக்காக—எனது இருகைகளையும் கூப்பி தி. மு. கழக அபேட்சகர்களை ஆதரித்து ஓட்டளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் தேடித் தரப்போகும் வெற்றி கட்சிக்கு மட்டுமல்ல—தமிழ் நாட்டின் சீர்கேட்டைப் போக்க ஒரு படைக்கலத்தைத் தயாரித்துத் தருவதாகும் என்றும் கூற விரும்புகிறேன்."

அன்புள்ள,
எஸ். தருமாம்பாள்
மகளிர் மன்றக் காப்பாளர்

தி. மு. கழகத்தை ஆதரித்து 'ரேடிகல் லீக்' பொதுக்கூட்டம்

6—3—57 மாலை 6½ மணி யளவில் சென்னை - எழும்பூர் ஒயிட் மெமோரியல் மண்டபத்தில், ரேடிகல் லீக் சார்பில், தி. மு. கழக அபேட்சகர்களை ஆதரித்து ஒரு பொதுக்கூட்டம் திரு. எம். இரத்தினம் எம். ஏ., அவர்கள் தலைமையில் நடைபெறும். டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி, என். சிவராஜ், பி. பால சுப்பிரமணியம், க. அன்பழகன் ஆகியோர் பேசுவர்.

தேர்தல் கூட்டங்கள்

சென்னை- ஆல்தோட்டம்

5-3-57 மாலை 6-30 மணிக்கு சென்னை — ஆல்தோட்டத்தில் நடைபெறும் தி. மு. கழகத் தேர்தல் பொதுக்கூட்டத்தில் நடிப்பு-இசைப்புலவர் கே. ஆர். இராமசாமி, தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, ஆர். எஸ். பாண்டியன், ப. உ. சண்முகம், ஏ. கே. வில்வம் ஆகியோர் பேசுவர்.

சென்னை-இராயபுரம்

6—3—57 மாலை 6 மணிக்கு சென்னை—இராயபுரம் கே. வி. கே. சாமி நினைவு மன்றச் சார்பில் இராயபுரம் ஆதம்சாயபு தெருவில் நடைபெறும் தேர்தல் கூட்டத்தில் தோழர்கள் கே. ஏ. மதியழகன், வி. எஸ். கோவிந்தராசன், ஆ. கி நட்டினன், இக்பால், மு. தமிழ்ச்செல்வன், ஏ. கே. இளங்கோவன் ஆகியோர் பேசுவர்.

மடுவங்கரை—கிண்டி :

5—3—57 மாலை 7 மணிக்கு சென்னை-மடுவங்கரை, 7½ மணிக்கு கிண்டி வேளச்சேரி ரோடு, 8 மணிக்கு அடையார் கோட்டூர் ஆகிய இடங்களில் நடைபெறும் தேர்தல் பொதுக்கூட்டங்களில் தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், வி. எஸ். கோவிந்தராசன், செங்நட்டுவன், ஏ. எஸ். ஜேசுபாதம், சைதை-சம்பந்தம், சே. மு. காதர் ஆகியோர் பேசுவர்.

தட்டிக் கேட்கும் ஆட்சி தென்னாட்டில் இல்லாததால்....!

மானத்தையும் இழந்து வாழ்கிறோம்

வருங்காலத்தை எண்ணி தி. மு. கழகத்தை ஆதரியுங்கள்

தாய்த் தமிழக மக்களுக்கு இலங்கை மலைநாட்டு தமிழர் உருக்கமிக்க வேண்டுகோள்

"இந்தியப் பொதுத் தேர்தலை, குறிப்பாகத் தமிழ் நாட்டுத் தேர்தலை இலங்கை வாழ் தமிழ் மக்கள் மிகவும் உன்னிப்பாகக் கவனித்துவருகின்றனர். இங்குள்ள தமிழ் மக்களின் நிலை, என்றுமில்லாத அளவுக்கு ஆபத்து சூழ்ந்து நிற்கின்றது. மதவெறியும் மொழிவெறியும் மேலும் மேலும் தூண்டப்பட்டு, தூபமிடப்பட்டு வருகின்றது.

"இலங்கையில் பிறந்து வளர்ந்த தமிழ் மகனுக்குக் குடியுரிமை இல்லை—ஆகவே அவன் குடித்தனத்துடன் கூடிவாழ முடியவில்லை; வாக்குரிமை இல்லை—ஆகவே வாதாடும் வாய்ப்போ அல்லது அவனது பிரதிநிதி பாராளுமன்றம் சென்று குறைகளைக்கூறும் வசதியோ இல்லை. ஒரு உரிமையும் வேண்டாம்—உழைக்க உடலிருக்கிறது என்று எண்ணினால், அழைக்க ஆளில்லை! காரணம், இலங்கைக் குடிமகனுக்குத்தான் வேலை கொடுக்க முடியுமென்று ஆட்சியின் அமைச்சர்களே அடிக்கடி கூறுகின்றனர்.

" 'தமிழன் எல்லாவற்றையும் இழந்துவிட்டான்; ஆனால் மானத்தை மாத்திரம் இழக்கவில்லை' என்று கூறுவார்கள்; இலங்கையில் அதையும் இழந்துதான் வாழவேண்டியிருக்கின்றது தமிழன், இன்றைய நாட்களில்!

"இந்த அநீதிகள், கடல்கடந்த தென்னாட்டவர்களுக்குத் தொடர்ந்து நடைபெறுவதற்குக் காரணம், தட்டிக் கேட்கும் நிலையில் தமிழகத்தில் ஆட்சி இல்லாததுதான். பாகிஸ்தானிலிருந்து வந்த பல இலட்சக்கணக்கானவர்களுக்குக் கோடிக்கணக்கான ரூபாய்களும் வசதிகளும் தந்து கொண்டிருக்கும் இந்திய ஆட்சியினர், இலங்கையைவிட்டு வெளியேற்றப் பட்டுவரும் தென்னாட்டவருக்கு ஒரு சிறு சலுகைகூடக் காட்டவில்லை; காட்டவேண்டுமென சென்னை ஆட்சியினரும் வற்புறுத்தவில்லை.

"இந்த மானங்கெட்ட நிலை மாறி, மதிப்பு, மரியாதை மிக்க நல்லநிலை ஏற்படவேண்டுமானால், வாக்காளர்களாகிய நீங்கள் அன்புகூர்ந்து தி. மு. கழகத்தின் செயல்வீரர்களுக்கே வாக்களிக்கவேண்டும். இது எங்களின் உள்ளக்கிடக்கையும் வேண்டுகோளுமாகுமென்பதை இரத்த பாசத்தால் கூறுகின்றோம். ஆகையால் வாக்காளர் நண்பர்களே! எங்களின் உடன்பிறந்தார்களே! வருங்காலத்தை எண்ணிப் பார்த்து, 'உதய சூரியன்' வெற்றிபெற வாக்களித்து ஆதரவு நல்குங்கள்."

இவ்வாறு இலங்கையிலுள்ள நுவரெலியா மாவட்டத்திலுள்ள மலை நாட்டுத் தமிழ் மக்கள் தாங்கள்படும் அல்லல்களை விளக்கி, கடல் கடந்த தமிழ் மக்களுக்கு இந்திய சர்க்காரும் காங்கிரசும் செய்துவரும் கொடுமைகளைச் சுட்டிக்காட்டி இந்நிலைபோக்க தி. மு. கழகத்திற்கு ஆதரவு தருமாறு கேட்டுக்கொண்டு தாய்த் தமிழக மக்களுக்கு உருக்கமான வேண்டுகோள் ஒன்றினை விடுத்துள்ளனர்.

கம்யூனிஸ்டுகளின் 'அரசியல் அநாகரிகம்'

ஆனைகாபுத்தூர் கிராம மக்கள் தரும் விளக்கம்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மக்கள் அளித்துவரும் ஆதரவு நாளுக்குநாள் பெருகப் பெருக, அதனைக் கண்டு மனம்தாளாது பொறாமை கொண்டு மாற்றுக் கட்சியினர் குறிப்பாகக் கம்யூனிஸ்டுகள் செய்து வரும் அரசியல் அநாகரீகச் செயல்களுக்குக் கணக்கு வழக்கில்லை. எந்த வகையிலேனும் கழகத் தோழர்கள்மீது மாசு கற்பித்து கழகத்தின் மீதுள்ள மக்கள் பற்றையும் பாசத்தையும் வேறு பக்கம் திருப்பிவிட அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளெல்லாம் பலிக்காதுபோகவே இப்போது வேறொரு முறையை—அரசியல் அநாகரீகமான ஒரு முறையை மேற்கொண்டுள்ளனர்.

'காஞ்சிபுரம் தொகுதி வாக்காளர்களுக்கும் அபேட்சகர்களுக்கும் ஆனகாபுத்தூர் கிராமவாசிகள் வேண்டுகோள்' என்ற தலைப்பில் அனுமதேயத் துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டிருக்கின்றனர், நமது 'காம்ரேடுகள்'!

இந்தப் பிரசுரத்திற்கும் ஆனகாபுத்தூர்வாசிகளுக்கும் எந்தவித மான தொடர்பும் இல்லை என்பது இப்போது வெட்டவெளிச்சமாகியிருக்கிறது.

" திரு. கே. எஸ். பார்த்தசாரதி (கம்யூனிஸ்டு அபேட்சகர்) அவர்களை ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்ளும் அந்தப் பிரசுரம் இவ்வூர் முக்கியஸ்தர்களுக்கும் இதரசங்கங்களுக்கும் தெரியாமல் வெளியிடப்பட்ட பிரசுரமாகும். திரு. கே. எஸ். பார்த்தசாரதி அவர்களது சேவையை நாங்கள் பாராட்டுகிறோம். ஆனால் அவர் சார்ந்துள்ள கட்சிக்கு நாங்களும் இக்கிராமவாசிகளும் சம்பந்தப்பட்டவர்களல்ல; இது யாரோ சில அனுமதேயங்களின் வேலை என்பதை காஞ்சிபுரம் மக்கள் அறிய வேண்டுகிறோம்'' என்று, ஆனகாபுத்தூர் கிராம புது ஜன சேவா சங்கம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய அமைப்புகள் கூட்டாகச் சேர்ந்து வெளியிட்டுள்ள மறுப்பு அறிக்கை ஒன்றில் வெளியிட்டிருக்கின்றன.

தேர்தல் முடிவுகள்

திருச்செங்கோடு, காரைக்குடி, அம்பாசமுத்திரம், சங்கரன்கோவில் தொகுதிகளில் நடைபெற்ற தேர்தல் முடிவுகள் 5—3—57 அன்றும், ஸ்ரீபெரும்புதூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, பாபநாசம், கோவில்பட்டி, கன்னியாகுமரி, பொள்ளாச்சி, பெருந்துறை, கோபிசெட்டிப்பாளையம் ஆகிய தொகுதித் தேர்தல் முடிவுகள் 6-ந் தேதியன்றும், காஞ்சிபுரம், தேனி, சிவகாசி, அரியலூர், ஆலங்குடி, மேட்டூர் தொகுதித் தேர்தல் முடிவுகள் 7-ந் தேதியன்றும் அறிவிக்கப்படலாமெனத் தெரிகிறது.

தாய்லாந்தில் அவசர நிலை பிரகடனம்

சர்க்காரைக் கவிழ்க்க சதி நடப்பதாக குற்றச்சாட்டு

பாங்காக், மார்ச் 2—

தாய்லாந்து நாட்டில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது.

தெருக்களில் மக்கள் கூடி நிற்க வேண்டாமெனக் கோரப்பட்டிருக்கின்றனர்.

அரசியல் சட்டத்தை—மன்னரை—மதத்தைக் காப்பாற்றவே இந்த நெருக்கடி நிலைப் பிரகடனம் என்று பிரதமர் சங்ராம் தெரிவித்திருக்கிறார்.

இதன் விளைவாக, டாங்கிகளும் இராணுவத்தினர் அடங்கிய லாரிகளும் நகரை வலம் வருகின்றனவாம்.

தென்னகத்தின் வளம் வடவரால் பாழடிக்கப்படும் அவலம்

இந்நிலைமாற தி. மு. கழகத்திற்கு ஆதரவு தாருங்கள்

பழனி பொதுக்கூட்டத்தில் புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் வேண்டுகோள்

"வடநாடு வளமுள்ளதாகிவிட்டது; ஆனால் தென்னாடோ நாளுக்கு நாள் தேய்ந்து கொண்டே போகிறது. நாட்டில் ஆலைகள், அணைகள் ஆகியவைகளை ஏற்படுத்த வேண்டுமானால் அதற்கான சகல பொறுப்பும் வடநாட்டவரிடம் தான் இருக்கிறது. தென்னாடு பெரிய ஆறுகள் ஓடும் நாடல்ல என்றும் பெரும் பெரும் ஆறுகள் கட்டவும் இடமும் சக்தியும் அற்ற நாடு என்றும் வடவர் கூறி இன்றுவரை தென்னாட்டின் வளங்களையெல்லாம் பாழாக்கிவருகின்றனர். இந்த நிலைமைகளையெல்லாம் நீக்கி நாட்டுக்கும் மக்களுக்கும் நல்வாழ்வு வேண்டுமென்ற கொள்கைக்காகப் போராடும் தி.மு.க.-விற்கு மக்கள் ஆதரவு தந்து கழக அபேட்சகர்களையும் கழக ஆதரவாளர்களையும் வெற்றி பெறச் செய்யவேண்டியது மக்கள் கடமையாகும்."

இவ்வாறு, புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் கடந்த 21-ந் தேதியன்று பழனியில் கழக ஆதரவு பெற்ற சட்டசபை உறுப்பினர் தோழர் வெங்கிடுசாமி அவர்களை ஆதரித்து நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

பழனி தேரடித் திடலில், நகர தி. மு. கழகச் சார்பில் தோழர் பி. எஸ். ஷேக் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எஸ். முத்து, அ. பொன்னம்பலனார் ஆகியோரும் கழகக் கொள்கைகளை விவரித்தும், கழகத்தைத் தேர்தலில் ஆதரிக்கவேண்டிய அவசியம் குறித்தும் பேசினர். (ந-நி.)

எம். பி. சாரதி

அறிவிப்பு

வேலூர் சட்டசபைத் தொகுதியில் தி. மு. கழகச் சார்பில் போட்டியிடும் என்னைப் பற்றி என் அனுமதியில்லாமல் வெளியிடப்படும் துண்டுப் பிரசுரங்கள், விளம்பரங்கள் எதுவும் என்னைக் கட்டுப்படுத்தாதென்பதை இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பன்
எம். பி. சாரதி

என். சிவரத்தினம்

அறிவிப்பு

சென்னை — வண்ணை சட்டசபைத் தொகுதியில் தி. மு. கழகச் சார்பில் போட்டியிடும் என்னைப் பற்றி, என் அனுமதியின்றி வெளியிடப்படும் எந்த விளம்பரங்கள், துண்டு அறிவிப்புகள் அறிக்கைகள், எதுவும் என்னைக் கட்டுப்படுத்தாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்,
என். சிவரத்தினம்

டாக்டர் அம்பேத்கார் மறைவு அனுதாபக் கூட்டம்

5—3—57 மாலை 6 மணிக்கு சென்னை—அயன்புரம் போலீஸ் நிலையம் எதிரில், சின்ன செம்பரம்பாக்கம் டாக்டர் அம்பேத்கார் படிப்பகச் சார்பில், அம்பேத்கார் மறைவு அனுதாபக் கூட்டம் தோழர் ரு. சங்கரன் தலைமையில் நடைபெறும். புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், தோழர்கள் முகவை-ஆர். எஸ். பாண்டியன், வி. எஸ். கோவிந்தராசன், ஆர். ஜார்ஜ், தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.